12th February 1958]

அது சரியாக இருந்தாலும் இருக்கும், தவறாக இருந்தாலும் இருக்கும். ஆகவே இதைப்பற்றி நான் பதில் சொல்வதற்கு தயாராக இல்லை, சரியான பதில் இருந்தால் தான் பதில் சொல்லமுடியும்.

SRI M. K. SOMASUNDARAM : ப்ளாக் டெவலெப்மெண்ட் ஏரியாவுக்குள்ளே மடத்திற்குச் சொந்தமான இடங்களில் அபிவிருத்தி செய்ய முடியாது என்று ப்ளாக் டெவலெப்மெண்ட் ஆபீசர்கள் சொல்லுகிறார்கள். மடத்திற்குரிய இடத்தை அபிவிருத்தி செய்வதற்காக ப்ளாக் டெவலெப்மெண்ட் ஆபீசரிடம் மாற்றிக்கொடுக்க முடியுமா என்று கேட்கிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : இதற்கு முன் சொன்ன பதில் இதற்கும் பொருந்தும்.

SRI A. VEDARATHNAM PILLAI : அரசாங்கம் ஏழு கோடி ரூபாய் செலவு செய்திருக்குமானால், அதற்குத் தகுந்த அளவிலே கிராம வாசிகளின் பகுதியையும் ஓரளவு கொடுத்திருக்கவேண்டும். ஜில்லா போர்டுகளும் ஓரளவு அவர்கள் பகுதியைக் கொடுத்திருக்கவேண்டும். அந்தத் தொகை எவ்வளவு என்று கூற முடியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்தப் புள்ளி விவரங்கள் இப்பொழுது என் கையில் இல்லை.

* 52 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Chief Minister be pleased to state when a Community Development Programme will be started in the Chengam taluk? 8-40 a.m.

THE HON. SRI C. SUBRAMANIAM : It cannot categorically be stated now as to when exactly the Community Development Programme will be extended to this taluk; but it may be any time before the end of the Second Plan, according to the programme as at present phased.

Special Officer in the Agriculture Department

* 53 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) whether any Special Officer has been appointed to enquire into the working of the Agriculture Department for improving its machinery and the tractor organization; and

(*b*) if so, whether he has submitted his recommendations?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) & (*b*) Yes.

SRI N. K. PALANISAMI : அவர்கள் சமர்பித்த யாதாஸ்தின் விவரங்களைப்பற்றி கனம் மந்திரி அவர்கள் சொல்ல முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அதிலே கண்ட சிபார்சுகள் இப்பொழுது பரிசீலனை செய்யப்பட்டு வருகின்றன. பரிசீலனை செய்யப்பட்ட விஷயங்களில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டும் வருகிறது. பரிபூரணமாக முடிவு செய்ததும் கனம் அங்கத்தினர் அவர்கள் மறுபடியும் ஒரு கேள்வி கேட்டால், இதை முற்றிலும் இந்த டேபிளிலே வைக்கலாம்.